



ஓலை 182| ஓசை 305| ஜூலை 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிஞரேறு வாணிதாசன்

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்.**

## பொருள்

**சோம்பேறியாக இருப்பவனிடம் மூதேவி (வறுமை) தங்குவாள். ஆனால், சோம்பல் இல்லாமல் முயற்சி செய்பவனுடைய உழைப்பில் இலக்குமி (செல்வம்) தங்குவாள். அதாவது, முயற்சி வறுமையை விரட்டி செல்வத்தைக் கொண்டு சேர்க்கும்.**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## முயன்றிடு!

பாவகை : (சிந்து)




ஏனடா தமிழா இருக்கு மிடத்தை
இறுக்கிப் பிடித்தி ருக்கிறாய்? - அட
ஊனடா உன்றன் உடலும், துணிந்து
உதறித் தள்ளிடு தமிழுக்காய்!

முயற்சி இன்றி முடங்கிக் கிடந்தால்
மூச்சும் இல்லாப் பிணமடா! - நீ
அயற்சி இன்றி அருந்தமிழ்க் காக்க
அலைபோல் எழுந்து வாடா!

உருட்டி மலைமேல் செல்லும் கல்லும்
உருண்டு பலமுறை வீழ்ந்தும் - சிசிபசு
உருட்டும் முயற்சி விட்டா னில்லை;
உனக்கும் வேண்டும் முயற்சி!

குள்ள உருவம் காலில் ஊனம்
உள்ள போதும் ஊக்கம் - முயற்சி
உள்ள பயனால் நெப்போ லியன்தான்
உயர்ந்தா ரெனிலவர் ஊக்கம்!

இரண்டு கண்ணில் ஒன்று குருடு
இருப்பினும் வெற்றிக் கண்டான் - மாற்றுத்
திறனாளி அலேக்சாந் தர்தான்;
துன்ப மிகுதியால் கண்டான்!

கூட்டைக் கட்டும் குருவி கூட
கூட்டை பலமுறை முயன்றே - நல்லக்
கூட்டைக் கட்டும்; சிலந்தியும் முயலும்
குன்றாய் முயன்றே நின்றிடு!



பாவகை : பஃறொடை வெண்பா

செயலினைச் செய்திடச்
செய்வதைச் சிந்தி
அயரா முயற்சியுடன்
அச்சம் தவிர்க்க
துயரெலாம் நீங்கிடும்
துச்சமாய் மங்கும்.
இயல்பாய் நடந்திட
இன்பமே சூழும்
இயவுடன் வாழ்தல் இலக்கு.



************************************

விதியை வெல்

பாவகை : இணைக்குறள் ஆசிரியப்பா

செய்வதைத் திருத்தியே
செயலாய் ஆக்கல்
ஆய்ந்தே நாளுமே
அறிவைத் தேர்தல்
ஓய்தல் விட்டே
ஓடியே உழைத்தல்
சாய்தல் நீக்கலே சதமாம்
பாய்ந்தே முன்செல்
காய்தல் வீணாம் .
ஆய்ப்புமே எதற்காம் ஆய்வாய்
ஏய்த்தல் தீதாம் ஏற்ப்பாய்.
வாய்ப்பைப் பெற்றே வாழ்தல் நன்றே.

கவிஞர் செ. கலைவாணி



நான்
பார்க்க மாட்டேனா
என்ற தவிப்பில்
அவளும்.

அவள்
பார்க்க மாட்டாளா
என்ற தவிப்பில்
நானும்.

இருவரும்
பார்த்துக்கொள்கிறோம்
ஒருவரை ஒருவர்
பார்க்காத தருணங்களில்.
/
என் கட்டை விரலுக்கு
மட்டும் தான்
மருதாணி வைத்திருக்கிறாள்.
அவளின்
கன்னங்கள் ரெண்டும்
சிவந்திருக்கிறது வெட்கத்தில்!
/
எனது நடையின்
வேகத்தை
இன்னும் கூட்ட
மனமில்லை எனக்கு.

என்னைப்
பிரிய மனமின்றி
பின்தொடர்ந்து
மூச்சிரைக்க
வந்து கொண்டிருக்கிறது
நன்றி மறவா
கவிதையொன்று.

ஆதலால்
எனது நடையின்
வேகத்தைக் கூட்ட
மனமில்லை எனக்கு.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

சாதிய சமத்துவம் நாடெங்கும்
சாதிய மதத்துவம் நாடுடெங்கும்
ஆவணம் இல்லா சாதிய சொல்
ஆவணம் படுத்தப்படும் சாதிய முள்

அறிவில்லா மானிடப் பிறப்பே ஆராய்ந்து சொல்
யாருக்கு இந்த வில் நீ அறிந்து விசாரணை சொல்
பிறப்புக்கும் இறப்புக்கும் உன் கூற்றை சொல் அது நாற்றை கொள்

இது யாருடைய ஒப்பனை அது வே உன் கற்பனை
கல்லுக்கும் காட்சி உண்டு அதை
கண்ட மனிதனுக்கும் சாட்சி உண்டு
இந்தக் காதல் குற்றம் இல்லை அது முற்றும்



இந்தக் காதல் சாதியை வென்ற கல்
இது கல்லறை அல்ல
அடுத்த தலைமுறையின் சாதி இல்லா
அடுத்த தலைமுறையின் சாலை இது

சாகப் பிறந்த மனித சாதி
எங்கு வந்தது ஏன் வந்தது எப்படி வந்து எதனால் வந்தது
எதற்காக வந்தது ஏன் இந்த குற்றப் பின்னணி
உன் சாதியே முட்டாள் பின்னணி

நன்கு அறிந்து கொள் உன் வாழ்க்கையில் தெரிந்து கொள்
ஆறறிவு ஆசான் நீ அறிவில்லாமல் பேசும் நீ
தலைமுறை கடந்தும் தடம் மறந்தும்
தடைகள் நீ செய்வது என்ன வாழ்வதென்ன!

என் காதலே காலம் வெல்லும் காலம்
கொள்ளும் அது அன்றை சொல்லும்!

கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

மின்னுவதெல்லாம் பொன்னல்ல
மின்னும் முகமெல்லாம் மெய்யின் முகவரியல்ல
மெழுகாய் உருகும் மிருதம்தான் உயிர்க்கொல்ல
பொய்க்கும் தெரியும் பொன்நிறம் பூசிக்கொள்ள
நஞ்சுக்கும் தெரியும் நறுமணம் வீசிச்செல்ல
கண்ணால் காண்பதெல்லாம் காலத்தின் சாட்சியல்ல
காதில் விழுவதெல்லாம் கருத்தின் நிஜமல்ல
ஆழமறியா ஆற்றில் அவசரமாய் இறங்கினும்
ஆராயா நம்பிக்கையில் அடிபடினும் ஏமாற்றமே
உண்மையுள் மாற்றாகா உருக்கியத் தங்கம்
பொய்யெனின் ஒளிர்ந்தும் பொடியாகும் கண்ணாடி
கல்லெல்லாம் வைரமல்ல காண்பதெலாம் மெய்யல்ல
சொல்லுள் முள்ளுண்டு சூரையாடும் வில்லுண்டு
கண்முன் காண்பதின் கருப்பொருள் ஆராயுமே
மெய்யின் முத்தை மீளாது கண்டெடுக்குமே
ஆராயின் அபாயமும் அனுபவாம் அறிஞர்க்கு
மின்னுவதெலாம் பொன்னன்றென
மெய்யுணர்வின் மனமே



கவிஞர் ஜமுனா ஜெகன், நாகர்கோவில்

# புகைப்படக் கருவி

பலரால் தோளில்
குழந்தையாய்ச் சுமக்கப்பட்ட
சொந்தம் நீ!



பூங்காவிலும் கடற்கரையிலும்
நீயே என்றும்
முதல்வனாய்!

பலரின் நினைவுகள்
மரணம் வரை
உன்னால் உற்சாகமாய்!

கறுப்பு வெள்ளை
தொடங்கி, வண்ணங்கள்
வரை நீயே முகங்களாய்!

அலைபேசியின் அவதாரத்தில்
நீ உடைந்துபோன
துண்டுகளாய்!

உந்தன் பிரசவத்தில்
பெற்றெடுத்த அழகிய
புகைப்படங்கள்,

இன்றும் இல்லந்தோறும்
திரும்பிப் பார்க்கும்
சுகமான சுமைகளாய்!

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# என் வளர்ப்பு மகனுக்கு

ரத்தம் இல்லாமல் பிறந்தவன்,
ஆனா ரத்தத்தை விட நெருக்கமானவன்.

உன்னை முதல் முறை கைநீட்டி கட்டியணைத்தேன்;
அன்றே என் இதயத்தையும் உன்னிடம் கொடுத்துவிட்டேன்.

பெற்றவள் யார் என்று தெரியவில்லை;
ஆனா நீ என் பேரைச் சொல்லி "அம்மா"ன்னு கூப்பிடும் போது,
இந்தப் பிரபஞ்சமே என் காலடியில் விழுந்துடுது.

உலகம் கேட்கும், "உன்னோட பிள்ளையா?"
நான் சிரிச்சு சொல்வேன், "இல்ல என் உயிர்!"ன்னு.



வளர்த்தது உடம்பை மட்டும் இல்லடா;
என் கனவையும் உனக்குள் வளர்த்தேன்.

நீ விழுந்தா என் முழங்கால் வலிக்கும்;
நீ சிரிச்சா என் வீடு தீபாவளி ஆகிடும்.

அன்புக்கு ரத்த உறவு தேவை இல்லை.
நீ என்னைத் தேர்ந்தெடுத்த மாதிரி,
நான் உன்னை ஆயிரம் தடவை தேர்ந்தெடுப்பேன்.

என் மகனே,
நீ இல்லாம நான் இல்லடா.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், கண்டி (இலங்கை)

# உடைந்த போன இதயம்

உள்ளே உயிர் துடிக்க.
உணர்வுகள் உதிர்ந்து போக
எண்ணமெல்லாம்
என்னவனின் நினைவுகளால்.

விதவிதமா உடைகள் வாங்கி கொடுத்து
பூச்சூட்டி பொட்டு வைத்து
அழகு பார்த்த விழிகள்
விழிமூடி போனதேனோ.

இத்துபோன துணிகள் கூட
இலக்கணம் பேசுதய்யா.
பத்திரமா பாதுகாத்தேன்
உன்னிடம் காட்டி காட்சியை
நினைவுபடுத்தி மகிழ.



ஆனால்
பாவி நான் அதை அள்ளி அணைத்து
அழத்தான் பாதுகாத்தேனோ தெரியலையே.
காட்சிகள் எல்லாம் கண்முன்னே கண்டு பரிதவிக்கிறேனே.
ஏனய்யா எனை விட்டு போனீர்.

மஞ்சள் முகத்தை அள்ளி எடுத்து அழகுடி என்று
சொல்லிய சொற்களை
அர்த்தமில்லாமல் ஆக்கியதேனோ.
மாமா என்று மருகத்தானா.

தலையணையை தினமும் காயவைக்கிறேன்
உனை நினைத்து நான் விடும் கண்ணீரில் நனைவதால்.
பட்டெல்லாம் பரணுக்கு போச்சு
பொட்டும் கரைஞ்சு போச்சு.

மஞ்சளும் மங்கிப் போச்சு.
பூவும் வாடி போச்சு.

இதில் எதுவும் என்னுடன் சேராது
என்னில் பாதியானவன்
என்னை பாதியில் விட்டு விட்டு
போனதால்.
ஒன்றைத் தவிர
ஆம்
வாடிய மலர்கள் மட்டும் மலரும்.
எனது இறுதி யாத்திரையில்.

உடைந்த பந்தம்
உருக்குலைந்த இதயம்
உள்ளத்தால் மட்டும் வாழ்வு
நினைவுகள் மட்டும் நிரந்தரம்

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர் (சென்னை)

விலகி செல்கிறாய்
விடை சொல்லாமல்
நிரம்பும் விழிகள்.

****

காத்திருந்த பொழுதுகள்
கானலாகிப் போக
வறண்ட நாள்கள்.

*****

கனவுகள் கரைந்தன
காரிகை கடந்து செல்ல
விடியலில்லா வான்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

அகர முதல இலக்கியப் பேரவை

சிற்றிடை அசைவினில்
சிதறியது உள்ளம்

கள்ளச் சிரிப்பினில்
கனிவானேன் கண்ணே

விழிகள் விரிந்திட
வியப்பானேன் நானே

இதழோரச் சிவப்பே
இதயத்தில் உவப்பே

குற்றாலச் சாரலது
கண்ணோரம் ஊறிவர

குளுமையில் குளிர்ந்தே
குமரியிடம் வசமானேன்

வர்ணனைக்குள் அடங்கிடாத
வஞ்சியும் நீதானே

மயக்கும் பார்வையால்
மனதைக் கவர்ந்தாயே

எண்ணமது சுழன்றிட
ஏகாந்தமது மறைந்ததே



ஈர்த்திட்டாய் என்னையே
ஈசலாய் சுற்றுகிறேனே

அருகினில் வந்திடவே
ஆசையது மீறுகிறதே

நளினமான நங்கையே
நாணத்தில் வீழ்ந்தாயோ

நங்கூரமதைப் பாய்த்து
நெஞ்சமதில் நிலைத்தாயே

உணர்வுகள் எழுகிறதே
உறவாகிக் கலந்திடு

உரியவள் என்றாகியே
உரிமையைத் தந்திடு

சஞ்சலமதைப் போக்கியே
சகியாய் ஆகிவிடு

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

பெண்ணே!
உடலை மறைப்பதற்குத்தான்
ஆடை;
ஆண்களின் பார்வையை
கவர்வதற்கல்ல.




தன் உடல் உறுப்புகளைப்
பாதுகாத்துக் கொள்வதற்காகவே
ஆடை அணிகிறோம்;
மற்றவர்கள் பார்த்து
இகழ்ந்து பேசுவதற்கல்ல.

நாம் உடுத்தும் உடையின் விதம்
நமக்குச் சரியாகத் தெரிந்தாலும்,
பார்ப்பவர்களுக்கும் அதேபோல்
காட்சியளிக்க வேண்டும்
என்ற அவசியமில்லை.

பெண்கள் அணியும் ஆடையை
முறையான கண்ணோட்டத்தில் பார்த்தால்,
எந்த ஒரு தவறும்
நிகழ வாய்ப்பில்லை.

எண்ணங்களை மாற்று;
பெண்கள் மீது வைத்திருக்கும்
தீய சிந்தனைகளிலிருந்து
வெளியேற முயற்சி செய்!

கவிஞர் மா. மோனிஷா

நறுக்கென்று தைத்தோர்,
நுண்வலி தந்தது
சிறு முள்.

விலகிச் சென்றிருப்பேன்
தெரிந்திருந்தால்.
அறியாமையால்
அழைத்துக் கொண்ட வலி.



பிரயத்தனங்களால்
பெருந்துயர்களைக் கடந்து
வாகை சூட முடிந்த
பகுத்தறிவினால் கூட,
இனம் காண முடிவதில்லை
இந்தச் சிறு முட்களை.

ஸ்திரமாகக் காலூன்ற முடியாதபடி
சுரீரெனத் தைக்கிறது.

அகற்றி விடும் எத்தனத்தில்
போராடும் பொழுதுகள்
வீணாய்ப் போகின்றன.

கிண்டி எடுத்துவிட்டாலும்,
தைத்திருந்த இடம்
நொந்து வலிக்கிறது.

இப்படித்தான் வாழ்க்கையில்,
எதிர்பாராதவர்களால்,
அறிமுகமில்லாதவர்களால்
சுமத்தப்படும் வலிகள்
சும்மாயிருப்பதில்லை.

கவிஞர் சம்மாந்துறை மஷூறா

ஈகை என்றும்
ஈச்வரனின் கொடையன்றோ?
பூக்களை எங்கேனும்
பூட்டி வைப்பதுண்டோ?
தீட்டிய திட்டத்தில்
தீய வழியில் கொள்முதலோ?
வாழ்வின் ஆதாரம்
வாரிச் செல்லப்படுமோ?



சேர்த்த சொத்தை
சேதாரமின்றிப் பங்கிடணுமே!
பேணிச் சேர்த்ததை
பேய்களும் கொண்டுபோகுமோ?
நேசத்தோடு சேர்த்தே
நேர்த்தியாய் கொடுத்திடலாகாதோ?

தூர் வாரும் தூயக் கிணற்றிலேயே
ஊறும் அன்றோ?
அகமதில் உண்மை
அள்ளித் தருவதிலே பெருமை!

வறுமைக் கோட்டினை
வேரறுத்தே வள்ளல்களாகிடுவோமோ?

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# குதிரையின் காலடி ஓசை

நடையா இது நடையா? ஒரு
நாடகமன்றோ நடக்கிறது என
திரைப்படக் கவிஞர் எழுதுவார்;
குதிரையின் நடையொரு நாடகம்.

மனிதர்களுடன் எளிதில் பழகும்
குதிரை புத்திசாலித்தனம்,
நீண்ட செயல்திறன், சோர்வற்ற
ஆற்றலென அசத்தும் நம்மை.



இதில் பெல்ஜியன் டிராப்ட் என
ஒருவகை சாதாரணமானதல்ல;
உலகின் வலிமையானது என
அறியப்படும் அற்புதக் குதிரை.

ஏழடி உயரத்தில் தடித்த கால்கள்,
அசாதாரண உழைப்பு வலிமை,
தசைநிறைந்த உடலமைப்பு;
நடக்கையில் குளம்பொலி ரிதமே.

ஏதோ பாட்டின் மெட்டுக்குச் சுருதி
சேர்த்து தாளம் வாசிப்பதுபோல,
நடையின் ஒலி நம்மை மயக்க,
துன்பங்களை மறப்போம் சிறிது.

கவிஞர் கி. சுப்பிரமணியன்



தித்திக்கும் முத்தம் தந்து,
எத்திக்கும் நீயே நின்று,
தித்திக்கும் முத்தம் தந்து,
எத்திக்கும் நீயே நின்று,
கொடியாய் படர்ந்தாய் என்
குழந்தையாய் மார்பிலே வந்து!

உன் மழலை மொழி பேசி,
என் உலகம் காட்டினாய்;
நீயே என் உலகம் என,
தாயாய் நானே வியந்தேன்!

குறும்புகள் பேசி,
குழந்தையாய் நின்றாய்!
கரும்புபோல் இனித்தது
கருவிழிக் கண்ணோக்கி
ஒரு மொழி பேசினாய் — "அம்மா" என!

எத்தனை இன்பம் கண்டேன்!
அத்தனையும் "அம்மா" என்ற சொல்லில்
அர்த்தம் கண்டேன்!
நீ பேசியதோ முதல் வார்த்தை;
இவளுக்கோ அது வாழ்வின் இறுதி வரை!

இன்று நீயோ அகவையில் பெரிதானாய்;
நானோ உன்னை அப்படியே பார்க்கிறேன்.
என் பார்வையில் மாற்றம் இல்லை;
உன் மழலை மொழி மட்டும் மாறியது!

காலங்களின் பிடியில் மனிதன்
கற்றுக்கொண்டது கொஞ்சம்.
காத்திருக்க வேண்டும்
காலங்களுக்காக,
இன்னும் காத்திருப்பு முடியும் வரை!

கவிஞர் ஜீவனிந்ரா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

மலர்கின்ற வேளையில்,
மையலாய் விடும் தூதும்,
துறுதுறுப்பும்.

முட்களின் பாக்களில்
சிக்காது சிறையெடுக்க
சிறகின் படபடப்பும்.

மீசை முறுக்கிய காற்று
தள்ளி விளையாடி,
தவிப்பில் நிறுத்திடும்.

அழகிய காட்சியில்
மலரும் மனமும்,
தன்னை மறந்து மலர்ந்து,
இதழும் பூக்கும்.

இளங்கவிதை ஒன்று
இதமாய் வலம் வரும்;
என்ன செய்வேன் நானும்
உன் வசம்.



கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

உழுவான்
தலைக்கடையிலே

பசி! பசி! என்று
பறப்போற்கு;

போதும் போதும் என்று
விளம்புவோன்

உழவன் என்பதால்
ஓதுவார் அனைவரும்

இயற்கையை துதிப்பதின்
மந்தணம் அறிவாயெனவே;

ஓதுவார் எல்லாம்
உழுவான் தலைக்கடையிலே.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூரு

# மனிதம் எங்கே?

பெண் என்னும்
படைப்பை அழிப்பதா
மனிதம் என்பது?

காக்க வேண்டிய கைகளே
கயவர் ஆகிவிட்டால்,
எங்கே போனது
கண்ணியம் என்பது?

இளமையோ, முதுமையோ
எதையும் பாராமல்,

இம்சிக்கும் இழிசெயல்
இன்று
அன்றாட நிகழ்வானதே.
உன்னைப் பெற்றவள்
நினைவுக்கு வரவில்லையா?

உன்னோடு பிறந்தவள்,
உன்னால் பிறந்தவள்
நினைவில் இல்லையா?

மாற்றான் பிள்ளை என்றாலும்,
அவளும் ஒரு பிள்ளைதானே?
தோன்றவில்லையா?

உன் ஆசையை அடக்கத் தெரியாத உனக்கு,
"நான்" என்ற கர்வமும்,
"ஆண்" என்ற அகந்தையும்
தேவையே இல்லையே.



பூவை சூடிக் கொள்வது
தவறில்லை.
அதை கசக்கி எறிந்து,
எரித்துவிடுவது பாவம் தானே.

பெண்ணுக்கு
தைரியம் கற்றுக் கொடுங்கள்.
ஆணுக்கு பெண்ணை மதிக்கக்
கற்றுக் கொடுங்கள்.

காணாமல் போன மனிதம்
இனியேனும்
திரும்பி வரட்டும்
வருங்காலத்தில்.

கவிஞர் கார்த்திகா மணி

எப்போதும்
எந்நேரத்திலும்
எங்கேனும்
ஏதோ ஒரு ஈர்ப்பு
ஏதோ ஒரு சுடர்
ஏதோ ஒரு உவகை
ஏதோ ஒரு உற்சாகத்தைத்
தேடிக் கொண்டே இருக்கும்
உள்ளத்தில்
அஃதில்லையென்ற உறுத்தல்
வெற்றிடமெனக்
குழிந்து கிடக்கிறது



வாழ்வின்
ஒவ்வொரு நொடிப்பொழுதையும்
கடந்து செல்வது
பெருஞ்சவாலன்றி வேறில்லை..
அவையெல்லாம் தாண்டி
மிக உன்னதமான இலக்கை
அடைந்து கொள்வது
அன்பினால் மட்டுமே
சாத்தியம்.

சில நேரங்களில்
சொற்கள் தேவைப்படுவதில்லை,
தொடர்ந்து முன்னோக்கிப் பயணப்படுவதற்கு
தேவையாய் இருப்பது
அன்பின் சிறுஉத்வேகம் மட்டுமே!

கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

இறைவன் தந்த
கொடை மனிதனுக்கு;

அதை
மாற்ற நினைத்தால்
மரணமது உனக்கு!



கவிஞர் ஜெரால்டு

நேற்றை நினைத்து நின்றால்,
நாளை காத்திருக்காது.


மாறும் உலகில்,
மாறத் தெரிந்த மனமே
மலர்ந்து நிற்கும்.

பணம் தேடி ஓடும் பாதையில்,
அன்பைத் தொலைக்காதே.

வெற்றி தேடும் பயணத்தில்,
உன்னை நீயே மறக்காதே.

காயங்கள் வந்தாலும்,
கனவுகளைக் கைவிடாதே.

இருள் நீண்டாலும்,
விடியல் வழி தவறாது.



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

போரில்லா உலகம் வேண்டும்!
புவியெங்கும் நிறைவு வேண்டும்!

மாந்தரினம் சிறக்க வேண்டும்!
மாண்புடனே நிலைக்க வேண்டும்!

உயிர்களிலே உணர்வு வேண்டும்!
உணர்வினிலே உரிமை வேண்டும்!

இன்னுயிரைக் காத்தல் வேண்டும்!
இன்பமெங்கும் பூத்தல் வேண்டும்!

நன்னெறியில் வாழ்வு வேண்டும்!
நன்னயமாய் யாவும் வேண்டும்!

உண்மையினைக் காத்தல் வேண்டும்!
உயர்வுடனே வாழ்தல் வேண்டும்!

தன்னிலையை அறிதல் வேண்டும்!
தன்திறனால் உயர்தல் வேண்டும்!

எண்ணமதில் உயர்வு வேண்டும்!
ஏற்றத்துடன் என்றும் வேண்டும்!



கவிஞர் சா. நாகூர் பிச்சை, திண்டுக்கல்

# சிறகுகளைச் சிதைக்காதீர்!

வண்ணப் பறவையின் சிறகுகள் அவை;
வடிவமைத்த கனவுகளைச் சிதைக்காதீர்!
மண்ணில் அவளும் ஓர் உயிர் அன்றோ?
மனதின் ஆசையை மிதிக்காதீர்!

சாதனை வானில் பறந்திட நினைக்கும்
சந்தனப் பேழையை மூடிவிடாதீர்!
போதனை என்றே கைவிலங்கால் பூட்டிப்
புன்னகை மலரைக் கருகவிடாதீர்!



அடுப்படி ஒளியில் அடுக்கிடும் பாத்திரம்
அவளது உலகம் என்றுரைக்காதீர்!
விண்வெளி தொட்டிடும் பேரொளி அவளென
விளங்கிடச் செய்யும் வழிமறிக்காதீர்!

கல்லூரிச் சாலைகள் கடந்திடத் துடிக்கும்
கால்களின் வேகத்தைக் குறைத்திடாதீர்!
வல்லமை கொண்டு உலகினை ஆள
வரும் அவள் பாதையைப் பறித்திடாதீர்!

சுதந்திரக் காற்றில் அவள் சுவாசிக்கட்டும்!
அவள் சூடிய கனவுகள் பலிக்கட்டும்!
சிதைக்காமல் அவளது சிந்தனை வளர்த்து
உலகம் முழுதும் பெருமை நிலைக்கட்டும்!

கவிஞர் பாத்திமா ஹகீமா அமீனுதீன், ஓட்டமாவடி



கல் ஒன்று எழுந்து
கனல்கோபம் கொண்டு
உளியோடு ஒத்துழைக்காமல் போனால்
சிலை எப்படி உருவாகும்?
சிற்பிக்குள்
கலை எப்படி கருவாகும்?

சொல் ஒன்று எழுந்து
சோம்பல் முறிக்காமல்
சுருண்டு கிடந்து
கற்பனைகளோடு கைகோர்க்காது போனால்
கவிஞன் எப்படிப்
கவிதைகளைப் படைக்க முடியும்?
கவலைப்படும் மனிதர்கள்
கண்ணீரை எப்படித்
துடைக்க முடியும்?

வில் ஒன்று எழுந்து
வீம்பாய்
வளையாமல்
அம்போடு அடம் பிடித்தால்
இலக்கை எப்படித்
தொட முடியும்?
எப்படி வளரும் தலைமுறைக்கு
இலட்சியத்தை
இட முடியும்?

புல் ஒன்று எழுந்து
பனித்துளிக்கு மேடை
அமைக்காமல்
புலம்பிக்கொண்டு இருந்தால்
இயற்கை அழகை எப்படி
ரசிக்க முடியும்?
இனிமையை எப்படிப்
புசிக்க முடியும்?

கவிஞர் முனைவர் அ. ச. மு. முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

காலமெல்லாம் உழன்று
கதியற்றுப் புரண்டு
காற்றோடு கலந்திடக்
கடிமனம் கள்வெறி கொள்கையில்
இலகுவாய் நடந்தது
அந்த இதயப் பரிமாற்றம்!

தூசி;
கல்; மண்;
சேறு; சகதி ஆகியவை
எப்போதும் போல் என்னைச் சேர்த்தணைத்துப்
புதிய புனைவாக்கிப் பூட்டியதையோ
அல்லது
சந்தனம்; ஜவ்வாது;
மாலை; மரியாதை;
மலர்செண்டு மதிப்பென மயங்கிப் புரண்டோ
அமைந்துபோன புதுவாழ்வு இதுவென
என்னைக் காட்டியதுமில்லை;
அதன் பொருட்டு
என்னை வாட்டியதும் இல்லை!

இருந்தும் என்னைச்
சிலைவடித்துச் சித்திரமாய்ச் செய்த
அதிசயச் சிற்பி அவள்தான்!

விளக்குகள் அறியாத
தொலைவானம் நான்!
இருளென்னும் கருப்பைக்குள்



அருளாமல் சிறைப்பட்ட
ஆயுள்கைதி நான்!

அப்படியான என்னை
பிடிபிடியெனத் தொடங்கிப்
பெருமழையாய் என்னுள் விழுந்து
பேராற்றின் கரையில்
என்னைக் கரைசேர்த்த
கட்டுமரம் நீ!

என்னுள் புதைந்த
எத்தனையோ துன்பங்கள்,
உனது அன்பால்தானே
இடம் வலம் தெரியாமல்
இடமாறிப் போனது!

நீதானே
என்னைத் தாலாட்டும் பூங்காற்று!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

அவர்கள் அவர்களாக இருப்பதில்லை
நான் நானாக இருக்க அனுமதிப்பதில்லை
யாரையோ அவர்களும், அவர்களை நானும்
நகலெடுக்க வேண்டி இருக்கிறது
உருவங்களை உருவக்காட்டி
நகலெடுத்தல்தானே வாழ்க்கை.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# குற்றாலச் சாரலது

குற்றாலச் சாரலது
கண்ணோரம் ஊறிவர,
ஊற்றாகக் காதல்மழை
உள்ளத்திலே பெய்கிறதே!


வற்றாத நேசத்திலே
வல்லினமாய்ச் செழிக்கிறதே;
சுற்றிடும் பூமியாகச்
சுழலுகிறேன் தினம்தினமே!

தொற்றுநோயாகத்
தொல்லையின்றித் தொடருகிறேன்;
பற்றிய மோகத்தில்
பருவராகம் மீட்டுகிறேன்!

முற்றும் உன்னோடு
முழுவரிகள் பேசுகிறேன்;
சிற்றிடை அழகில்
சிறப்பினை அறிகிறேன்!

கூற்றுவன் நானாகக்
கூடவே வருகிறேன்;
விற்றுவிட்டேன் என்னை
விலையின்றி உன்னிடத்தில்!

பற்றிய மோகத்தில்
பாசவலை விரிக்கின்றேன்;
வற்றாத அன்பிலே
வாழும்வரை நானிருப்பேன்!



கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# மழை நேரத் தவிப்பில் மனம்

மழை பெய்கிறது.
வானத்தின் பாரம்
குறைகிறது!

பூமி
மழையை மௌனமாக
மடியில் ஏந்திக்கொள்கிறது.

சாளரத்தின் அருகில்
நிற்கும் எனக்குள்
மௌன விவாதங்களை
எழுப்புகிறது
பெய்யும் மழை!

மண்வாசம் நாசியைத்தீண்ட
எனக்குள் ஏனோ..
நினைவுகளின் சுமைகள்!
பழைய நினைவலைகள்
நனைந்த காகிதமாய்!

உன் சிரிப்பை நினைவூட்டி
மின்னல் மறைகிறது!
இடிமுழக்கத்தில்
திடுக்கிடுகிறது இதயம்!

அடிக்கும் சாரல்
ஆறுதல் தரும் தோழனாய்
எந்தன் கண்ணீரைத்
துடைத்து மறைக்கிறது!



சொல்லித் தீராத வார்த்தைகள்
எல்லாம் கரைந்தோடுகின்றன
மழையின் சத்தத்தில்!

காத்திருப்பின் தவிப்பை
கூட்டிச் செல்கிறது
குளிர்ந்த காற்று!

மழை நின்றுவிடுகிறது.
ஆனால்
ஓயாமல் பெய்கிறது!
உள்ளத்தில் பருவமழை!

மண் குளிர்ந்தது
மழையின் வரவால்!
ஆனால்
என்னுள் மிகுந்தது
ஏக்கமும் தவிப்பும்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# வீடணன் சரணாகதி

தமிழுக்குக் கதியென்று கம்பராமாயணத்தையும்
திருக்குறளையும் சொல்லிப் பழகிய தமிழாசான் அடியேன்!
தரணிவாழும் மனிதருக்குக் கதி எது தருமென எண்ணிப் பார்க்கிறேன்;
தன்னடக்கம் கொண்டு செய்கின்ற சரணாகதி
தன்னிகரற்ற நிம்மதியை எல்லோருக்கும் தந்திடுமே!



கார்த்திகைத் திங்கள் வந்துவிட்டால் தமிழர்கள்
காதுகளெல்லாம் குளிர்ந்துவிடும் ஐயப்பசாமிகளின் சரண-
கோஷம் கேட்டென்று சொன்னால் அது மிகையில்லை அன்றோ?
குமரனுக்குத் தன்னை அடிமையாய்த் தந்து
குவலயமிதில் நிம்மதியாய் வாழ்வோரை யான் கண்டதுமுண்டு!

தரணியோடு தேவருலகு பாதாள லோகமெனத்
தலைபத்து கொண்ட இராவணன் ஆண்டாலும்,
தயரத மகனின் மனையாளாம் சீதாவைத்
திருட்டுத்தனமாய்த் தூக்கிச் சென்று மானமழிந்து உயிரிழந்த
தன்மையுரைக்கும் இராமகாதை அனைவரையும் கவர்ந்ததொன்றே!

அஞ்சனை மைந்தன் வாயுபுத்திரன்
அனுமந்தன் அலைந்து திரிந்து கண்டனன்
அசோக வனத்தில் அடைக்கப்பட்ட சீதையை;
அன்னையவள் தன்னுடன் தப்பிவர மறுத்த பின்பு,
ஆத்திரங்கொண்ட அனுமந்தன் இலங்கைக்குச் சீதையின்
ஆற்றல் காட்டிடத் தீவைத்தனனே!

மந்திர ஆலோசனைக் கூட்டமதில் வீடணனொரு
மந்திரியாக நல்லதை எடுத்துச் சொல்லியும், சீதைமேல் கொண்ட
மயக்கத்தால் மடையனான இராவணன் உண்மையுணராது
மூர்க்கம்மிகக் கொண்டு வீடணனை விரட்ட, அவன்தன்
மூச்சைக் காத்திட வந்து சரணடைந்தான் முகுந்தனிடம்!

அனுமந்தன் தவிரப் பிறர் வீடண சரணாகதியை ஏற்காதேயென
அறிவுரையை இராமனுக்குச் சொன்னாலும், தந்தனன்
அடைக்கலம் வீடணனுக்கு; அதனால் பெரும் புகழ்பெற்றனன் இராமனுமே;
ஆதலாலடியேன் சொல்வேன் எப்போதும் சரணாகதி சிறப்பென்றே!

கம்பராமாயணப் பாடல் (சீர்மிகு வடிவம்):
குகனொடும் ஐவரானோம் முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம்; எம்முழை அன்பின் வந்த
அகமலி காதல் ஐய! நின்னொடும் எழுவ ரானோம்;
புகலருங் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# திறக்கப்படாத பூட்டு



ஆசைகளைக் கோர்வையாக்கித்
கோவைக்குள் புதைத்து வைக்கும்
இரகசியப் பெட்டகமோ இருதயம்!

உதயமாகும் ஏதோ ஆசையினை
அள்ளித் தெளித்து வெளிப்படுத்தும்
ஆரவாரமொன்றும் இல்லை.

இப்போதெல்லாம் அசைக்க மறுத்துப்
புதைத்தே வைக்க வேண்டியிருக்கிறது...
கிளைமறைவில் ஒளிந்து ஒளி இழந்த
கன்றிப்போன பழமொன்றைப் போலவே!

பணமொன்றையே குறிவைத்துக்
குடுவையுள் மறையும் பூதமொன்றாகிறது,
ஆசைகளும் அடையாளங்களும்!

தவறொன்றைத் தரிகெட்டுப் போன
மனமேதான் செய்து தொலைத்துவிட்டு,
இப்போதெல்லாம் எண்ணி எண்ணியே சாகடிக்கும்!

நோக்கமெல்லாம் இப்போதைக்கு,
எங்கேயும் கால்போன திசைக்கே
போய்வரத் துடிக்கும்!

நடைபோடாமலே நடுங்கும்
கால்களை வைத்துக்கொண்டா
நடைபோட வேண்டுமெனக் கேலிமனம்,
சோலியே இல்லாதவன்
ஆசையென்றதைப் போலச் சிரிக்கும்!

புள்ளிமானுக்குள் புலி பதுங்கும்
வேலை என்னவாக இருக்கும்?
பணமே இல்லை என்றறிந்தே மனமே
ஆசையை விதைக்கும்போது!

மூடிமறைத்துச் சாவியைத் தொலைத்த
கதையைப் போலவே நினைக்கும்
மனமாகவே மாற வேண்டும்;
வேறென்ன செய்ய முடியும்?

கவிஞர் சஞ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

# இதயம் வெல்லும் தெய்வ குணம்!

"அ"ன்பும் நட்பும் பாசமுமே பகைமை கொல்லும் மந்திரமாம்;
அன்புஎன்னும் ஒருநிலையே தவவாழ்வின் உயர்நிலை!

"ஆ"சை, களவு, கோபம், விரோதம், குரோதம் களைந்திட்ட
மனிதனே புனிதன்என்ற உயர்நிலையால்
போற்றும் நிலை தந்திடுமே!

"இ"ன்பம் பயக்கும் செயலாலே வாழ்வில் இனிமை கூடுமே;
இனிய வார்த்தை ஒன்றுதான் இதயம் சிறக்கும் உண்மையே!

"ஈ"கை குணமும் இரக்க மனமும
இதயம் வெல்லும் தெய்வ குணம்!

"உ"ண்மை, நேர்மை வாழ்வென்றும்
வாழ்வில் உயர்த்தும் நம்மையே!

"ஊ"க்கமும் முயற்சியும் வாழ்விலே மூச்சாய்க் கொண்டு
வாழும் மனிதனுக்கு, வெற்றியின் வாசலாய்
நன்மை வந்து சேருமே!

"எ"ன்னாளும் உண்மையும் தடம்மாறா வாழ்வுமே
நம்மை உயர்த்தும் வாழ்விலே!

"ஏ"க்கமும் தாக்கமும் வாழ்வியலைச் சிதைக்குமே;
மாறாத அன்பே உறவு வளர்க்கும் உண்மையே!

"ஐ"யமும் கவலையும் இல்லாத வாழ்வுதான் எந்நாளும்
வாழ்வுக்கு உயர்வான ஒளியை ஆதவனாய்த் தந்திடுமே!

"ஒ"ற்றுமையின் குணத்தாலே கூட்டுறவே நாட்டுறவாய்,
ஒன்றுபட்டு வாழ்ந்திடும் உண்மை வாழ்வு மிளிர்ந்திடும்!

"ஓ"ய்வுக்கு ஓய்வுகொடுக்கும் ஓய்வறியா உழைப்பும்,
உண்மை நேர்மை வாழ்வும் இருவிழியாய்க் கொண்டவர்க்கு
வாழ்வு என்றும் சொர்க்கம்தான்; வாழும் காலம் இனிமைதான்!

"ஔ"வையின் வாய்மொழியே வாழ்வியலின் மூச்சாய்ப் போற்றும்
நல்ல வாழ்வுதான், பொன்னென மின்னும் புனித வாழ்வாய் மாறுமே!

எ"ஃ"குக் கோட்டையாய் கலங்காத நெஞ்சமும் உயர்வான எண்ணமும்,
உலகினிலே நம்மையே உயர்த்திக் காட்டும் என்றுமே!



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# சமாதானம்

சண்டையில் பிரியும்
அழகிய உறவை
ஒரு நொடியில் இணைத்திடும்
தமிழ் வடிவமே சமாதானம்!

புறா சமாதானச்
சின்னமாய்க் கருதப்பட்டது
அந்தக்காலம்;
வளர்க்கும் பறவையாய்க்
கருதப்படுவது
இந்தக்காலம்!



எல்லாம் ஒருநாள் மாறிப்போகும்;
வார்த்தையால் உடையும்
உள்ளத்தை ஒன்றுசேர்ப்பதே
சமாதானம்!

சண்டை என்ற
பலவருடப் பிரிவைச்
சமாதானம் என்ற சொல்
அழித்துவிடும்;
வாக்குவாதத்திலும்
சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டும்!

கோபத்தின் வெளிப்பாடு சண்டை;
சந்தோஷத்தின் வெளிப்பாடு சமாதானம்!

சண்டையிட்டுப் பேசாமல்
இருப்பதை விட,
சிறு புன்னகையுடன்
சமாதானம் பெறுவதே சிறந்தது!

கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா நிம்ஸியா, மூதூர் 01

# விந்தை மனிதர்

அன்பு,உறவு, கருணை எல்லாம் பின்னுக்கு தள்ளி
பணத்திற்கே முதல் மரியாதை கொடுக்கும்
இந்த கலியுகத்தில்.

பணம் வைத்திருப்பவனை கோபத்துடனும்
சில்லறை வைத்திருப்பவனை
புன்னகையுடனும் அணுகும் பேருந்து நடத்துனர்
உண்மையிலேயே ஒரு
விந்தை மனிதர்



கவிஞர் தங்க. பிரியதர்ஷினி, கறம்பக்குடி

# நலம், நலம் அறிய ஆவல்

"நல்லா இருக்கீங்களா?"
எனக் கேட்கிறார்கள்,
நாம் எப்படி இருக்க வேண்டும்
என்பதை முடிவு செய்தவர்கள்!

எப்படி இருந்தால் என்ன?
இருந்தாலும்
ஒரு வார்த்தை கேட்டு வைப்போமே
எனக் கேட்கிறார்கள்!



எப்படியோ,
நம்மை "நல்லா இருக்கியா?"
எனக் கேட்கவாவது
ஆள் இருக்கிறார்களே?
அதே போதும் என்கிறது மனம்!

எப்படியோ இருக்கிறோம்;
இருக்கிறதே வரம்,
என்கிறது காலம்!

நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

கவிஞர் இரா. மதிராஜ், அலப்பட்சாக் கவுண்டன் புதூர்

# மனிதநேயம் மலரட்டும்!

கண்ணில் வைத்த மைபோல
வாழ்க்கை என்பதை அழகாக்க,
வாழவைக்கும் பல கரங்கள்
செல்வம் உன்னிடம் இருக்கும் மானிடனே!
தெரிந்தது போதும் நம் வாழ்க்கை இதுவே!



ஏழை மனது புரியவில்லை சிலருக்கே;
கேட்பவர் கௌரவம் பார்ப்பது உன்னிடமே!
ஆறாத பசிக்கு ஒருபிடி கேட்கிறதே;
ஓட்டைக் குடிசை இங்கு எங்கும் நிற்கவே,
வீதியுலாச் செல்கிறது மக்கள் பாத அடிகளே!

அரசியல் பேசும் வியாபாரம் நாட்டிலே;
ஏழ்மை தீர்க்க முடியா எதிர்பார்ப்புகள் பயமாகவே,
நீங்காத் துன்பம் இதுதானே?
மக்கள் கண்கள் கலங்கும் வாழ்க்கையே!

பெய்யும் மழையும் நீக்கும் கறைகளுமே;
ஆறாக ஓடும் கண்ணீர் மழைத்துளியே!
எதைத் தான் கூறவோ இங்கு அனைத்தும் கவலைதானே;
மனிதநேயம் எட்டிப் பார்க்கும் காலமே!

வள்ளுவன் குறள் படைத்த அந்த அழகிய மகிழ் சகிதம்,
கொடுத்தால் இங்கு குறைவது இல்லை ஒன்றுமே;
எடுக்கத்தானே அனைத்தும் வளரும் இங்கே!
வாழ்வின் முடிவில் மனிதன் அனைத்துக்கும் நன்றி என்பானே!

கவிஞர் ஸபா நளீர், கண்டி (இலங்கை)

# தாமரையின் தவிப்பு



நீ சுட்டெரிப்பாய் என்று தெரிந்தும்,
தினந்தோறும் உன் வருகைக்காகக் காத்திருந்தேன்!

எட்டாத உயரத்தில் நீ இருப்பதை அறிந்தும்,
உன் ஒளி என்மீது படவே
எத்தனையோ இன்னல்களைத் தாங்கினேன்!

உன்னைத் தேடித்தேடி வந்ததாலோ என்னவோ,
இன்றுவரை
தேடலே எனக்குச் சொந்தமாகிவிட்டது!

நீர்வற்றிய குளத்தில்
வாழ ஆசைப்பட்டேன்;
இப்போது
அவதியே என் வாழ்வாகிவிட்டது!

உன்னால்தான் நான் மலர்வேன் என்பதை மறந்து,
உன் வெப்பத்தால்
என்னை வாடவும் வதங்கவும் செய்துவிட்டாய்!

மழைக்கால இடைவெளியில்,
மேகங்களின் நடுவே
எட்டிப் பார்த்துவிட்டு வந்துவிடுவாய் என்று
நம்பிக்கையோடு காத்திருந்தேன்!

ஆனால் நீயோ,
கோடையின் கொடூர வெப்பத்தால்
நான் இருந்த இடத்தையே
வேரோடு வறண்டுபோகச் செய்துவிட்டாய்!

என்னை மட்டுமல்ல,
என் இதழ்களைக்கூட ஏற்க மறுத்துவிட்டு,
எட்டாத உயரத்திற்குச் சென்றுவிட்டாய்!

குளத்தில் சிக்கித் தவிக்கும் கொடியைப் போல,
"நீதான் என்னைச் சுட்டெரித்தாயா?"
என்ற வியப்பில் துடிக்கும்
இந்தத் தாமரையின் இதயத்தை
இன்னும் உயிரோடு வைத்திருப்பது,
இத்தனை ஆண்டுகள்
அந்தக் குளம் தந்த சிறு ஈரப்பதம்தான்!

கவிஞர் தி. கமலவேணி, மானியம் ஆடூர்

பிரிய மனமின்றி
பிடிவாதம் பிடிக்கிறது
பிரியம்



கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று



என் தந்தையின் மகளதிகாரத்தில்
அத்தனையும் பிழை
என் குறும்புகள் எல்லாம்
கொண்டாடப்பட்டிருந்ததால்
மண்பாண்டத்தில்
மகத்துவம் செய்த மந்திரக் குயவன்
அவர் சுயநல வானில்
நான் மட்டும் ஒற்றை நிலா

அத்தனையும் செய்து விட்டு
அமைதியாக பின் நிற்கும் விந்தை கற்றவர்
நைந்த செருப்பிலும் கசங்கிய சட்டையிலும்
பேரரசன் அவர்
அம்பாரி ஏற்றிய முதுகு சுருங்கி விட்டது
இன்னும் சுருங்கவில்லை
அவர் இதய சிம்மாசனத்தில் நான்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# வாழ்வியல்

வேர்கள் மண் பட்டு அழுக்கானால்
மலர்கள் கண் பட்டு அழகாகும்
கருத்த மேகம் தான்
உழைத்த நீரை மழையாக தருகிறது

உழைத்தால் உயரலாம்
விழித்தால் வாழலாம்
விழுந்தாலும் விழுதுகளையும்
வாழ வைக்கிறது ஆலமரம்

காற்றைப் போல அழியாதிருக்க
நாமொன்றும் கடவுள் இல்லை
மண்ணுக்கும் சேர்த்தே உழைப்பதால் தான்
உழவும் வாழ்கிறது மனிதமும் வாழ்கிறது

சிந்திய வியர்வை சிப்பிக்குள் முத்து
சிந்தித்து வாழ்வதே அறத்தின் சொத்து
அடிபட்டாலும் கடிப்பட்டாலும்
கனிகள் இனிக்கவே செய்யும்

இரவுகள் விடிந்தே தீரும்
சோதனைகள் முடிந்தே தீரும்
வெற்றியும் உயர்வும்
நம்மை நாடி வந்தே தீரும்
கரைப்பட்ட நிலா பிழைப்பட்டதென்றாலும்
அதுதான், முழு நிலவாய் ஒளி வீசும்

உதிர்க்க முடியாத இலைகளை
முட்களாக வைத்திருக்கும் கள்ளியைப் போல
துன்பங்கள் சிறு பகுதியாய்



கூடவே தான் வரும்
ஆனால் வாழ்வு நமக்கானது!
வெற்றி இலக்கானது !

வெற்றி அருகில் கிடைப்பதல்ல!
அரிதாய் கிடைப்பது!
அதனால்தான் முத்துக்கு மதிப்பிருக்கு!
முட்களுக்கு மதிப்பில்லை!

கதிரவன் கண் பட்டதும்
இடம் தெரியாமல் மறையும்
பனித்துளிகளைப் போல

தடம் தெரியாமல் மறையும் காயங்கள்
நீ விழுந்தாலும் மடிந்து உயரும் இமயங்கள் !
வெயிலுக்கு நிழல் தருவது
மரங்களின் வாழ்வியல் உழைத்து உயர்வது
மனிதனின் வாழ்வியல் !

கவிஞர் சி. முத்தரசன், அரியலூர்

# புறப்பட்டேன் ஒரு பயணம்!

தாயை விட்டுத்
தன் பிள்ளைகளை விட்டு,

வீட்டை விட்டு
வீட்டிலுள்ள உடைமைகளை விட்டு,

உறவுகள் யாவரும் நோக்கி நிற்க
உருகி நானும் வெளியேறினேன்!

இறையில்லம் நாடிய இப்பயணம் போலே,
இறுதிப் பயணமும் இருக்குமே என்று


மனசாட்சி முன்வந்து பேசியது;
மரணத்தை அதுவும் நினைவுபடுத்தியது!

வாகனத்தைச் சந்தூக்கின்
வகையாக உணர்ந்தேன்;

பேச்சுமொழி துறந்தவளைப்
போல்மாறி அமர்ந்தேன்!

இறை காட்டிய உவமையது
இசைவாக்கம் பெற்றேன்;

மரணித்து ஹஜ்ஜிலும்
மறுபிறவி எடுத்திடவே,



மீட்சிபெற்று மீண்டும்
மீளாமல் பாவத்தில்

ஆகிடவே வேண்டுமென
ஆத்மாவும் உரைத்தது!

தொடங்கியதே புனிதப் பயணம்;
தொடரட்டுமே இறுதிவரை!

கவிஞர் பஸ்லா பர்ஸான், காத்தான்குடி (இலங்கை)

# மெல்லிய இதயம்


அகலமாய் வளர்ந்திருக்கும்
ஆல மரம்
ஆண்டாண்டு காலமாய்
தன்னை விரித்து
விருட்சித்துக் கொள்கிறது.
அங்கு விழுதுகள்
மேல்நோக்கி தன் கால்களை ஊன்றவில்லை.
மண்ணின் வதனத்தைத் தொட்டு அனுமதி கேட்கிறது.
மெல்லிசைக் குயிலின் குரலுக்கு
அந்த அகன்ற மரத்தின் மெல்லிய
நிழலும் தென்றலும்
இதமாய் வரவேற்புக் கொடுக்கிறது.

ஆல மரக்கிளைகளின்
நடுவே இருண்ட இடமும் அதன்
இடுக்குகளில் அடுக்கடுக்காய்
அசந்து கிடக்கும்
அரவமும்,ஒட்டி வாழும் புழுப் பூச்சிகளையும்
எந்த விழிகளும் கண்டுகொள்ளவில்லை.
இப்படித்தான் சமூகச் சமுத்திரத்தில்
நீந்தும் பெயர்பெற்றுத்
திகழும் ஒவ்வொரு ஆன்மாவுக்குள்ளும்
சில வன்மை மறைந்து மெல்லிய மனம்
பூத்துக் காய்க்கிறது.
படர்ந்து பாய்ந்து கொடிவிடும் மனதின்
மெல்லிய திரை தான் மனிதனாய்
வாழ வழி விடுகிறது.



கவிஞர் சேஹ் மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

## அங்கேயும்



பிரபலமான ஆலயத்தில்
ஆண்டவனின் தரிசனம்
விரைவாய்க்
கிடைப்பதாய்க் கனவு வர,
"அது எப்படி?
பக்தர்கள் அதிகம் இருப்பார்களே!"

உறவினர் ஒருவர் அமைதியாய்ப்
பேசுவதாய்க் கனவு வர,
"அது எப்படி?
அவர் அப்படிப்பட்டவர் இல்லையே!"

செய்பணி ஒரு பணி
செய்வதாய்க் கனவு வர,
"அது எப்படி?
இதற்கு முன் இதையல்லவா
செய்ய வேண்டும்!"

கல்லூரித் தேர்வு முடிவுக்காய்
காத்திருப்பதாய்க் கனவு வர,
"அது எப்படி?
நாம் படிப்பு
முடித்துவிட்டோமே!"

கையில் நிறைய
பணம் இருப்பதாய்க் கனவு வர,
"அது எப்படி?
மாத வருமானமே இவ்வளவுதானே!"

தொடர் வெற்றிகளும்
சந்தோஷங்களும்
இருப்பதாய்க் கனவு வர,
"அது எப்படி?
வாழ்க்கையில் நடந்ததாய்ச்
சரித்திரமே இல்லையே!"

காலை உணவாய்
இட்லி சாப்பிடுவதாய்க் கனவு வர,
"அது எப்படி?
இதுதான் பிடிக்காதே!"
என அங்கும் மூளையின் ஞாபக
அடுக்குகளில் இருக்கும்
புத்தியின் தர்க்கரீதியான கேள்வி!

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

அத்தியாயம் 1

இரவு பதினொரு மணி

நவீனம்

மறுநாள் குளித்து விட்டு கிளம்பி அலுவலகத்திற்கு வந்த போது எல்லோரும் சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.



பியூன் பேசிய இந்தி அவனுக்கு கொஞ்டம் கூட புரிய வில்லை. அவன் தந்த சாயாவைக் குடித்து விட்டு அந்தப் பக்கமாகா காமிராவைத் தோளில் சுமந்து நின்றுகொண்டிருந்த காமிரா மேனிடம் ஆங்கிலத்தில் "எப்போது ராஜன் லால் வருவார்?" என்று கேட்ட போது "கியா மாலும். தும் ரிஷப்ஷனிஸ்டுக்கு பூஜ்ஜோ" (எனக்குத் தெரியாது. வரவேற்பாளினியிடம் கேள்) என்று சொல்லி விட்டுப் போனான்.

தயக்கமாக ரிஷப்ஷனிஷ்டம் வந்த போது "ஹாய் மதராசி ஹாண்ட்ஸம் கம், யூ. ஆர். தினேஷ் நோ. ?
வெயிட் இப்போது பாய் வந்து விடுவார்" என்று அவன் கன்னத்தில் தட்டிய கை விரல்களை முத்தமிட்டுக் கொண்டாள்.

கொஞ்ச நேரத்தில் வந்த ராஜன் லால் "ஹலோ தினேஷ். எப்படி யிருக்கிறீர்கள்?" என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

"ஓ.கே. சார்." என்று தினேஷ் சொன்னதும் வெளியேயிருந்து உள்ளே ஒரு பெரிய மனிதரும் ஒரு தேவதையும் நுழைந்தனர்.
"அய் நாம் இருப்பது பூலோகமா. நான் சொர்க்கத்துக்கு வந்து விட வில்லையே. என்ன ஆச்சரியம் சுரேஷ்தேவ் எப்படி இங்கே உயிரோடு வந்தான்." என்று கண்கள் அகலமாக விரிய ஆச்சரியத்துடன் இந்தியில் வாசனை கலந்து கேட்டது சுத்தமாக தினேஷுக்கு புரியவில்லை.

அத்தியாயம் 1

இரவு பதினொரு மணி

நவீனம்

"ஒன்றும் ஆச்சரியப் பட வேண்டியதில்லை. நான் ஏற்கனவே உங்களிடம் சொல்லி விட்டுத் தானே இவனுடைய போட்டோவை காட்டி விட்டு இவன் எப்படியிருப்பான் என்று இவன் நடித்த விளம்பர படம் எல்லாம் உங்களுக்குக் காட்டி விட்டுத் தானே இங்கே அழைத்தேன். இதிலே ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது ஷில்பா" என்றார் ராஜன் லால்.

அவனுக்கு அவர் பேசியதில் ஷில்பா அவள் பெயர் என்பது மட்டும் புரிந்தது.

"இவனுக்கு விஷயம் தெரியுமா" என்றார் ஷில்பாவோடு வந்த மதன்லால்.

"இவனுக்கு இந்தியே தெரியாது கவலைப் படாதே" என்றார் ராஜன் லால்.

"அழகான முட்டையிடும் வாத்து" என்று அவனை வளைத்து கன்னத்தில் முத்தமிட்டு விட்டு ஷில்பா நடக்க மயக்கமா கலக்கமா நிலையில் கன்னத்தைக் கூட துடைக்க மறந்து நின்று கொண்டிருந்தான். இதுவரை பெண் ஸ்பரிசமே அறியாத தினேஷ்.

"டேக் இட் ஈஸி மைடியர்" என்று மதன்லாலுடன் கிளம்பினார் ராஜன் லால்.

"சார் ஷூட்டிங் எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள்" என்று தினேஷ் ஆங்கிலத்தில் கேட்க மதன் லால், ராஜன் லாலை நோக்கி கண்களால் கேள்வி கேட்டார்.

"ம்... மிஸ்டர் தினேஷ். இன்றைக்கு உங்களோடு நடிக்கிற பெண் மாதுரிக்கு உடம்பு சரியில்லையாம். நீங்கள் மும்பையை சுற்றிப் பாருங்கள். நாளைக்கு ஷூட்டிங் வைத்துக் கொள்ளலாம். ஓ.கே."

"தேங்க்யூ சார்." என்று சொல்லி விட்டு தன் லாட்ஜை நோக்கி நடந்தான் தினேஷ்.

தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

கட்டுரை

**முன்னுரை**



தமிழ் இலக்கியத்தில் இயற்கை, மனிதநேயம், தமிழ்ப்பற்று ஆகியவற்றை இனிமையான மொழிநடையில் பாடி மக்களின் இதயங்களில் நிலையான இடம் பிடித்தவர் வாணிதாசன். பாரதிதாசன் மரபில் தோன்றிய முக்கியமான கவிஞர்களில் ஒருவரான அவர், "இயற்கைக் கவிஞர்", "கவிஞரேறு" என்று தமிழுலகால் போற்றப்படுகிறார். எளிய சொற்களில் ஆழமான கருத்துகளை வெளிப்படுத்திய அவரது கவிதைகள் இன்றளவும் வாசகர்களை ஈர்த்து வருகின்றன.

**பிறப்பு**

வாணிதாசன் 1915 ஆம் ஆண்டு ஜூலை 22 அன்று, அன்றைய பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்ட புதுச்சேரியில் பிறந்தார். அவருடைய இயற்பெயர் அரங்கசாமி எத்திராசலு (Arangasamy Ethirajulu). சிறு வயதிலிருந்தே தமிழ்மொழி, இலக்கியம், இயற்கை ஆகியவற்றின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். பள்ளிப் பருவத்திலேயே கவிதைகள் எழுதத் தொடங்கிய அவர், பின்னர் தமிழுலகில் தனித்துவமான கவிஞராக உயர்ந்தார்.

**கல்வியும் ஆசிரியப் பணியும்**

தமிழ்மொழியில் ஆழ்ந்த புலமை பெற்ற வாணிதாசன், ஆசிரியராகப் பணியாற்றினார். மாணவர்களிடையே தமிழின் மீது அன்பையும், நல்லொழுக்கத்தையும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டார். கல்விப் பணியுடன் இலக்கியப் பணியையும் இணைத்து பல நூல்களையும் கவிதைகளையும் படைத்தார்.

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

## இலக்கியப் பங்களிப்பு

வாணிதாசனின் கவிதைகள் இயற்கை, மனிதநேயம், காதல், சமூகச் சீர்திருத்தம், உழைப்பின் பெருமை, பெண்களின் உயர்வு, குழந்தைகளின் உலகம், தமிழ்மொழியின் பெருமை போன்ற பல்வேறு கருத்துகளை மையமாகக் கொண்டவை. மலர், மழை, காற்று, வயல், பறவை, நிலவு, ஆறு போன்ற இயற்கைக் கூறுகளை மனித உணர்வுகளோடு இணைத்து பாடியதால் அவர் "இயற்கைக் கவிஞர்" என்று போற்றப்படுகிறார்.

## கவிதைகளின் சிறப்புகள்

எளிமையான, இனிமையான மொழிநடை. இசைநயம் நிறைந்த கவிதைகள். இயற்கைக் காட்சிகளை உயிர்ப்புடன் சித்தரிக்கும் திறன். தமிழ்ப்பற்று மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வு. சமூக அக்கறை மற்றும் மனிதநேயம். குழந்தைகளும் ரசிக்கும் எளிமை.

## முக்கிய நூல்கள்

வாணிதாசன் பல கவிதைத் தொகுப்புகள் குறிப்பிடத்தக்க சில:

- தமிழச்சி
- கொடிமுல்லை
- எழிலோவியம்
- தீர்த்த யாத்திரை
- இன்ப இலக்கியம்
- எழில் விருத்தம்
- பொங்கல் பரிசு
- தொடுவானம்
- பாட்டுப் பிறக்குமடா
- இரவு வரவில்லை
- சிரித்த நுணா
- பாட்டரங்கப் பாடல்கள்
- குழந்தை இலக்கியப் பாடல்கள்
- இனிக்கும் பாட்டு

மேலும் பல கவிதைகள், கட்டுரைகள் மற்றும் சிறுவர் இலக்கியப் படைப்புகளையும் அவர் தமிழுக்கு வழங்கியுள்ளார்.

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

**விருதுகளும் சிறப்புகளும்**

வாணிதாசனின் இலக்கியச் சேவையைப் பாராட்டி பல்வேறு அமைப்புகள் அவருக்கு சிறப்புகள் வழங்கின.

"கவிஞரேறு" என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. இயற்கைக் கவிதைகளுக்காக தமிழறிஞர்களால் பெரிதும் பாராட்டப்பட்டார். அவரது படைப்புகள் பல பள்ளி மற்றும் கல்லூரி பாடத்திட்டங்களில் இடம்பெற்றுள்ளன. தமிழின் சிறந்த இயற்கைக் கவிஞர்களில் ஒருவராக இலக்கிய உலகில் மதிக்கப்படுகிறார்.
பல இலக்கிய அமைப்புகள் வாழ்நாள் முழுவதும் அவரை கௌரவித்தன.

**இறப்பு**

தமிழ் இலக்கியத்திற்கு அரிய பங்களிப்புகளைச் செய்த வாணிதாசன், 1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 அன்று காலமானார். அவரது மறைவு தமிழுலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாக அமைந்தது. இருப்பினும் அவரது கவிதைகள் இன்றும் வாசகர்களின் மனங்களில் உயிருடன் வாழ்கின்றன.

**வாணிதாசனின் இலக்கிய மரபு**

வாணிதாசனின் கவிதைகள் இயற்கையை நேசிக்கவும், மனிதநேயத்துடன் வாழவும், தமிழ்மொழியைப் போற்றவும் நம்மை ஊக்குவிக்கின்றன. எளிமையான சொல்லாட்சி, ஆழமான சிந்தனை, இசைநயம் ஆகியவற்றின் காரணமாக அவரது படைப்புகள் தலைமுறைகளைத் தாண்டி வாசிக்கப்படுகின்றன.

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

## நாளை நமதே

# தோல்வி உன்னைத் துரத்தினால்
# நீ வெற்றியை நோக்கி ஓடு;
# உன் முயற்சியே
# உனக்கான பாதையை வகுக்கும்!

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை




தொடர்பிற்கு :

9597887847
8870884969


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com